ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி
21 SEP 2021
சென்னை-600 015



## சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை- தமிழ்நாடு சட்டமன்ற பேரவை - மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கை எண்.42ன் மீதான அறிவிப்பு - பெண் ஊராட்சி செயலர்களுக்கு மருத்துவ விடுப்பினை ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ5) துறை

அரசாணை (நிலை) எண். 113 — நாள் 07.09.2021.
பிலவ, ஆவணி 22
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை) எண். 51, ப.ம.நி.சீ(எப்.ஆர்.III) துறை நாள் 16.05.2011
2. அரசாணை (நிலை) எண். 72, ஊ.வ.(ம) ஊ.(பஅ5) துறை நாள் 09.07.2013.
3. அரசாணை (நிலை) எண். 148, ஊ.வ.(ம) ஊ.(பஅ5) துறை நாள் 27.11.2014
4. அரசாணை நிலை) எண். 105, ப.ம.நி.சீ(எப்.ஆர்.III) துறை நாள் 7.11.2016
5. அரசாணை (நிலை) எண்.100, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்.29.07.2019.
6. அரசாணை (நிலை) எண்.84, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (எப்.ஆர்-III) துறை, நாள்.23.08.2021.
7. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.கோ.எண்.44797/2021/ இ4, நாள்: 25.08.2021.

## ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பெண் அரசு ஊழியர்களுக்கு ஊதியத்துடன் வழங்கப்பட்டு வந்த மகப்பேறு விடுப்பு 90 நாட்களில் இருந்து 180 நாட்களாக உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கிராம ஊராட்சிகளில் பணிபுரிந்து வரும் பெண் ஊராட்சி செயலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேறு விடுப்பும் 90 நாட்களில் இருந்து 180 நாட்களாக நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டது.

....2

2. அதனைத் தொடர்ந்து மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் பெண் அரசு ஊழியர்களுக்கு ஊதியத்துடன் வழங்கப்பட்டு வந்த மகப்பேறு விடுப்பு 180 நாட்களில் இருந்து 270 நாட்களாக மீண்டும் உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் பெண் ஊராட்சி செயலாளர்களுக்கும் மகப்பேறு விடுப்பு 180 நாட்களில் இருந்து 270 நாட்களாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 24.08.2021 அன்று 2021-22-ம் ஆண்டின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கை எண்.42-ன் மீது மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு வெளியிட்டுள்ளார்கள்:-

**"தமிழகத்திலுள்ள கிராம ஊராட்சிகளில் பணிபுரிந்துவரும் பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு விடுப்பு 9 மாதங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 13.08.2021 அன்று சட்டமன்றத்தில் அனைத்து பெண் அரசு ஊழியர்களுக்கும் மகப்பேறு விடுப்பு ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்தி அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது, அதற்கேற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் பெண் கிராம ஊராட்சி செயலர்களுக்கும் மகப்பேறு விடுப்பினை ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்தி வழங்கப்படும்".**

4. அதனைத் தொடர்ந்து மேலே ஏழில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதத்தில் கிராம ஊராட்சியில் பணிபுரியும் திருமணமான பெண் ஊராட்சி செயலர்களுக்கும் மகப்பேறு விடுப்பினை ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்தியும், அதனை மகப்பேறுக்கு முன் மகப்பேறுக்கு பின் என அவர்களது விருப்பத்திற்கேற்ப துய்க்க அனுமதித்தும் (Pre-confinement rest to post-confinement recuperation at their option) 1.7.2021 முன் மகப்பேறு விடுப்பில் சென்று தற்போது விடுப்பில் இருந்துவரும் பெண் ஊராட்சி செயலர்களுக்கும் பொருந்துமாறு அதன்படி விடுப்பினை நீட்டித்தும் தக்க ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு மிக கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப்பின், கிராம ஊராட்சியில் பணிபுரியும் திருமணமான பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு விடுப்பினை ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக உயர்த்தியும், அதனை மகப்பேறுக்கு முன் மகப்பேறுக்கு பின் என அவர்களது விருப்பத்திற்கேற்ப துய்க்க அனுமதித்தும் (Pre-confinement rest to post-confinement recuperation at their option) 01.07.2021 முன் மகப்பேறு

விடுப்பில் சென்று தற்போது விடுப்பில் இருந்துவரும் பெண் ஊராட்சி செயலர்களுக்கும் பொருந்துமாறு அதன்படி விடுப்பினை நீட்டித்தும் அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

5. அரசாணை வெளியிட்ட பின் தமிழ்நாடு கிராம ஊராட்சி செயலர்கள் (பணி விதிகள்) 2013-ல் உரிய திருத்தம் / சீராய்வு (Amendment) மேற்கொள்ளப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**Dr.K.கோபால்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**
**இயக்குநர்,ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,**
**சென்னை 15**
**மாநில கணக்காயர் , சென்னை 6/18/35**
**உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை**
**அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)**
**முதுநிலை நேர்முக உதவியாளர் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி)**
**முதுநிலை தனிச் செயலாளர், அரசு முதன்மைச்செயலாளர்,**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை**
**<u>நகல்</u>**
**மனித வள மேலாண்மைத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை—09.**
**இருப்புகோப்பு/உதிரி**

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவுஅலுவலர்**